**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

கூட்ட எண்.33 நாள். 20.09.2024.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 26.09.2024 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

**ooOoo**

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 26.09.2024 வியாழக்கிழமை காலை 10.30 டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் அன்பார்ந்த**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் : 20.09.2024.

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2024 மற்றும் ஆகஸ்டு 2024–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.550 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

<u>நகரமன்ற தலைவர் திருமதி.லட்சுமி பாரி அவர்கள் கொண்டு வரும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்</u>

இராணிப்பேட்டை அருகே உள்ள பனப்பாக்கத்தில் உள்ள விசாலமான சிப்காட் வளாகத்தில் ஜே.எல்.ஆர் மற்றும் டாடா மோட்டார்ஸ் உற்பத்தி நிலையம் மற்றும் காலணி பூங்கா ஆகியவற்றுக்கு **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள், செப்டம்பர் 28 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் அடிக்கல் நாட்ட வருகை புரிய உள்ளார்.

மேற்படி ஜே.எல்.ஆர் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு அகவலம், துறையூர், நெடும்புளி, மற்றும் பெருவளயம் ஆகிய நான்கு கிராமங்களில் இருந்து மொத்தம் 1,213 ஏக்கர் நிலம் மேற்படி திட்டத்திற்காக கண்டறியப்பட்டுள்ளது. இக்கிராமங்கள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள நெமிலி ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் வருகின்றன. மொத்தம் 1,213 ஏக்கரில், 470 ஏக்கரில் டாடா மோட்டார்ஸ் உற்பத்தி நிலையம் வரவுள்ளது, டாடா மோட்டார்ஸ் பிராண்டின் ஜே.எல்.ஆர். பிராண்டின் சொகுசு மாடல்களை உற்பத்தி செய்வதில் நாட்டிலேயே தமிழகத்தை முதலிடம் வகிக்கும் வகையில், ரூ.9,000 கோடி செலவில் டாடா மோட்டார்ஸ் உற்பத்தி நிலையம் வருகிறது. இதன் மூலம் அரக்கோணம் நகர இளைஞர்கள் உள்ளிட்ட சுமார் 10000 நபர்களுக்கு மேல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திதரவுள்ளது.

மேற்காணும் ஜே.எல்.ஆர் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு கொண்டு வர உறுதிதுணையாக இருந்த **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி** அவர்களுக்கும், மேற்படி ஜே.எல்.ஆர் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தினை இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைத்திட அனுமதி வழங்கிய **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும் இந்நகரமன்ற சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**தீர்மானம் எண்.551 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வருகையை ஒட்டி நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்தவும் மற்றும் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தளவாடச்சாமன்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை கொள்முதல் செய்துக்கொள்ள மதிப்பீடு ரூ.2.40 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதக்கு வைக்கப்படுகிறது.

| S.No. | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|
| | பொது சுகாதாரப்பிரிவில் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தேவையான தளவாடச்சாமன்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்தல் | ஒப்பந்ததாரர் திரு.வி.சதிஸ்குமார் (ஒன்றின் விலை ) | ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ரமேஷ்பாபு (ஒன்றின் விலை ) |
| 1 | கால்வாய் கரண்டி – 60 எண்ணிகை | 629.00 | 635.00 |
| 2 | மண்வெட்டி – 30 எண்ணிகை | 390.00 | 391.00 |
| 3 | கடப்பாரை கம்பி – 15 எண்ணிகை | 659.00 | 660.00 |
| 4 | வெட்டுக்கத்தி அரிவாள் – 30 எண்ணிகை | 380.00 | 381.00 |
| 5 | பிளாஸ்டிக் அன்னக்கூடை– 50 எண்ணிகை | 329.00 | 331.00 |
| 6 | கையோடு – 50 எண்ணிகை | 48.00 | 50.00 |
| 7 | தென்னந்துடப்பம் – 200 எண்ணிகை | 45.00 | 57.00 |
| 8 | கருப்பு பினாயில் – 100 லி | 245.00 | 246.00 |
| 9 | இரும்பு முள் கம்பி – 50 எண்ணிகை | 365.00 | 366.00 |
| 10 | கம்பூட் –25 ஜோடி | 550.00 | 551.00 |
| 11 | ரப்பர் கையூரை – 500 எண்ணிக்கை | 54.00 | 55.00 |

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.வி.சதிஸ்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.510/2024/எச்1)**

**தீர்மானம் எண்.552 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு தற்போது வருகின்ற மழைக்காலத்தில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மழைச்சட்டை (Rain Coat) தேவைப்படுவதை கருத்தில் கொண்டு தூய்மை பணியாளர்கள் – 89 மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் –4 எண்ணிக்கை என மொத்தம் 93 எண்ணிக்கையில் மழைச்சட்டை கொள்முதல் செய்துக்கொள்ள மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரர் M/S ஸ்ரீ யோகா எண்டர்பிரைசஸ் (ஒன்றின் விலை) | ஒப்பந்ததாரர் M/S ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் (ஒன்றின் விலை) |
| 1 | பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு 93 எண்ணிக்கையில் மழைச்சட்டை (Rain Coats) விநியோகம் செய்தல். | ரூ.1351/– | ரூ.1770/– |

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S ஸ்ரீ யோகா எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.510/2024/எச்1)**

**தீர்மானம் எண்.553** நாள். 26.09.2024

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், ரூ.508.18 இலட்சம் மதிப்பீட்டில் (ஒரு வருடத்திற்கு) வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில், வார்டு எண்.01 முதல் 36 வரையில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.03.2023 அன்று கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்திட நகர மன்ற தீர்மான எண். 391 நாள்.18.05.2023–ல் மன்ற அனுமதி வ்ழங்கப்பட்டு, 15.06.2023 முதல் 14.06.2024 வரை ஒரு ஆண்டிற்கு மட்டும் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும் நகர மன்ற தீர்மான எண்.288 நாள்.19.01.2023ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பணிகள் திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாமண்டிற்கான பணியினை நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் முதலாமண்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட 15.06.2023 முதல் 14.06.2024 வரை காலத்தில் திடக்கழிவு தொடர்பான பணிகளில் சுணக்கமின்றி பொதுமக்களிடம் புகார்கள் இன்றியும், நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏதும் வராத வண்ணம் நல்ல முறையில் பணி செய்துள்ளதை தொடர்ந்து நகர மன்ற தீர்மான எண்.527 நாள்.12.07.2024ல் 15.06.2024 முதல் 14.09.2024 வரை மூன்று மாதங்களுக்கு பணி உத்திரவு வழங்கபட்டு பணிகள் நல்ல முறையில் மேற்கொண்டதை தொடர்ந்து மீதமுள்ள ஒன்பது மாதங்களுக்கு (15.09.2024 முதல் 14.06.2025 வரை) பணியினை நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2682/2022/எச்1)

**தீர்மானம் எண்.554** நாள். 26.09.2024

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணம் நகராட்சி பொது மக்களுக்கும் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் நிலவேம்பு பவுடர் 300 கிலோ அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகம் (TAMPCOL) அவர்களிடம் கொள்முதல் செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,60,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2023/எச்1)

**தீர்மானம் எண்.555 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலைபள்ளியில் தற்காலிக கழிப்பிடம் அமைக்கும் பணியினை பணியின் அவசர அவசியம் கருதி திரு.C.பத்மநாபன், அரக்கோணம் நகராட்சி ஒப்பந்ததாரரின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கும், அதற்கான செலவின தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி பட்டியல் தொகை ரூ.35,000/- கல்விநிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 680/2024/இ1)

**தீர்மானம் எண்.556 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 23 சிவபாதம் நகர் மற்றும் வார்டு எண்.28 சோமசுந்தரம் நகரில் அமைந்துள்ள நுண் உரம் மையங்களை 25.06.2024 அன்று நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வில் நுண் உரம் மையத்தில் உள்ள Machinary-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்து உடன் இயக்குமாறு அறிவுறுத்தியதன் பேரில் மேற்காணும் நுண் உரம் மையங்களில் Machinary-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளான Shatter Machine, Conveyor Belt, மற்றும் Sieve Machine, ஆகியவைகளை பழுது நீக்கம் செய்ய பணியின் அவசர அவசியம் கருதி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JAISAI HOMECARE PRODUCTS, THIRUVALLORE நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)-ன்படி வருவாய் நிதியிலிருந்து ரூ.4,28,000/- வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 680/2024/இ1)

**தீர்மானம் எண்.557 நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

அரக்கோணம் நகராட்சிக்கு 2024–25 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழுமானியம் Tied Grant–ன் கீழ் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.16491/2023/EA–2 நாள் 27.06.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பணிக்கு 05.08.2024 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வஎண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர். | ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Supply, Delivery and Fixing of Chimney at Crematorium at Nehruji Nagar in Ward No. 5 (Ward B. Block No.–7) Arakkonam Municipality. | 1) SGS SERVICE | 13,03,309 |
| | | 2) GOOD CARE ENVIRO SYSTEM PVT LTD | 13,07,055 |
| | | 3) MHT ENGINEERING | 13,31,554 |
| | | 4) YES YES ENGINEERING | 13,31,920 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு (L1) பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.387/2024/இ1)

**தீர்மானம் எண்.558** நாள். 26.09.2024

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 10</u>

அரக்கோணம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024–25 ஆம் ஆண்டின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.2105/2024/P1 நாள் 11.06.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பணிக்கு 25.07.2024 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | குறைந்த தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | அதிக தொகை ரூ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 T.N.நகர் பகுதியில் பூங்கா மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல். | 39.00 | C.பத்மநாபன் | 37,68,391 | K.கிரிதரன் | 37,69,205 |
| 2 | அரக்கோணம் நகராட்சி பழைய பேருந்து நிலையம் காந்தி ரோடு பகுதியில் வணிக வளாகக் கட்டிடம் கட்டும் பணி. | 66.00 | K.ஸ்ரீநாத் | 65,72,991 | G.தாமோதரன் | 65,84,256 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு (L1) பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.390/2024/இ1)

**தீர்மானம் எண்.559** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண். 11</u>

அரக்கோணம் நகராட்சிக்கு 2024–25 ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியம் திட்டத்தின் (School Improvement Grant–SIG) கீழ் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 21615/2024/SS2 நாள் 22.07.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பணிக்கு 14.08.2024 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | குறைந்த தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | அதிக தொகை ரூ |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 35 கிருபில்ஸ்பேட்டை நகராட்சி தொடக்கப்பள்ளியில் கழிப்பறைகள் (5 எண்ணிக்கை) மற்றும் குளியலறை (5 எண்ணிக்கை) கட்டடம் கட்டும் பணி. | 16.00 | **P.மனோகர் பிரபு** | 15,60,414 | **S.ரமேஷ்பாபு** | 15,61,897 |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 காந்தி நகர் நகராட்சி நடுநிலை பள்ளியில் கழிப்பறைகள் (5எண்ணிக்கை) மற்றும் குளியலறை (5 எண்ணிக்கை) கட்டடம் கட்டும் பணி. | 16.00 | **P.வீரராகவன்** | 15,60,548 | **K.முனுசாமி** | 15,61,288 |
| 3 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலை பள்ளியில் கழிப்பறைகள் (5 எண்ணிக்கை) மற்றும் குளியலறை (5 எண்ணிக்கை) கட்டடம் கட்டும் பணி. | 16.00 | **K.முனுசாமி** | 15,60,548 | **P.வீரராகவன்** | 15,61,288 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலை பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணி. | 27.30 | **K.முனுசாமி** | 26,87,980 | **P.வீரராகவன்** | 26,91,097 |
| 5 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 உருது நகராட்சி ஆரம்ப பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டடம் கட்டும் பணி. | 18.50 | **P.மனோகர் பிரபு** | 17,92,727 | **S.ரமேஷ்பாபு** | 17,94,688 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு (L1) பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.386/2024/இ1)

**தீர்மானம் எண்.560** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு 2024–25 ஆம் ஆண்டு (Phase II) மூலதன மானிய நிதி (CGF) மற்றும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதியின் (O&M) கீழ் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 12079/2024/SS2 நாள் 22.07.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பணிக்கு 16.08.2024 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| **வ எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு** | **மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம்** | | **மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம்** | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | குறைந்த தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | அதிக தொகை ரூ |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 31 புதுப்பேட்டை பகுதியில் உள்ள இறைச்சிக் கூடம் (Slaughter House) கட்டிடம் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 25.00 | **JPM ENTERPRISES** | 23,35,858 | **S.RAMESH BABU** | 23,37,716 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு (L1) பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.543/2024/இ1)

**தீர்மானம் எண்.561** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024–25 ஆம் ஆண்டின் கீழ் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை

அவர்களின் செயல்முறை ந.க.எண்.2105/2024/P1 நாள் 11.06.2024–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கீழ்காணும் பணிக்கு 16.08.2024 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | குறைந்த தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திரு. | அதிக தொகை ரூ |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 ரத்தன்சந்த் நகர் பகுதியில் பூங்கா மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல். | 40.00 | **V.சதீஷ்குமார்** | 39,03,612 | **MP AND CO** | 39,08,125 |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு (L1) பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.390/2024/இ1)

**தீர்மானம் எண்.562** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

அரக்கோணம் நகராட்சியில் 2022–23–ம் ஆண்டிற்கான 15வது மத்திய நிதிக்குழு (Tied Grant) திட்டத்தின் கீழ் 26.06.2023 அன்று கீழ்காணும் பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.M.N.விஜய பாஸ்கர், நகராட்சி ஒப்பந்ததாரருக்கு 12.07.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | 2022–23 ஆம் ஆண்டிற்கான வது 15 மத்திய நிதிக்குழு (Tied Grant) திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கதொட்டி பராமரிப்பு பணி செய்தல். | 9.90 | **M.N.விஜய பாஸ்கர்** | **–0.00%** | **K.முனுசாமி** | **0.80%** |

மேற்காணும் பணி உத்திரவு வழங்கப்பட்டு ஓர் ஆண்டிற்கு மேலாகியும் 10 % பணியினை கூட மேற்கொள்ளாமலும், பல அறிவிப்பு கடிதங்கள் வழங்கியும் எவ்வித பதிலும் வழங்காமல் மெத்தனமாக செயல்பட்டு வருகிறார். எனவே மேற்காணும் L1 ஒப்பந்ததாரருக்கு பணியினை இரத்து செய்து L2 ஒப்பந்ததாரர் திரு,K.முனுசாமி அவர்களின் மூலம் L1 ஒப்பந்ததாரரின்

விலைக்கே பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.716/2023/இ1)

**தீர்மானம் எண்.563** நாள். 26.09.2024

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**பொருள் எண். 15**

அரக்கோணம் நகராட்சியில் 2024-25 ஆம் ஆண்டு கல்விநிதியின் கீழ் கீழ்காணும் நகராட்சிக்கு சொந்தமான 4 நகராட்சி பள்ளிகளில் Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.28.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிகளுக்கு Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.28.00 இலட்சம் கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலை பள்ளியில் Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.00 |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 காந்திநகர் நகராட்சி நடுநிலை பள்ளியில் Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.00 |
| 3 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 நகராட்சி ஆரம்ப பள்ளி சரோஜினி தெரு, சுவால்பேட்டை பள்ளியில் Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.00 |
| 4 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27 சோமசுந்தரம் நகர் நகராட்சி தொடக்கப்பள்ளி Smart Class வகுப்பறை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.00 |
| | **மொத்தம் ரூ.** | 28.00 |

அலுவலக குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.750/2024/இ1)

**தீர்மானம் எண்.564** நாள். 26.09.2024

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**பொருள் எண். 16**

அரக்கோணம் நகராட்சியிலிருந்து அரசு மற்றும் இதர துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள், மற்றும் நகராட்சி தொடர்பாக வைக்கப்படும் பேனர்களில் Logo பயன்படுத்த கீழ்காணும் Logo தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் Logo பயன்படுத்தி கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.565** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண். 17</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு – A, பிளாக்– 2, நகரளவு எண்.11/1 B 8 pt (பழைய சர்வே எண்.279/2) ல் 0.76 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க எண்.788/2024/ராமா நாள்.29/05/2024 – ல் மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ (ராமா) வரன்முறைப்படுத்துதல் எண்.29(R) / 2024 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் கிழமேல் சாலை வடபுறம் 195 அடி தென்புறம் 197 1/2 அடி வடக்கு தெற்கு கீழ்புறம் மற்றும் மேல்புறம் 20 அடி ஆக 3925 சதுரடி சாலையிடத்தை அரக்கோணம் சார்பதிவு அலுவலக தானபத்திர ஆவண எண்.7415 / 2014 நாள்.12.12.2014 இன் படி ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி பூங்கா இடம் 1912 சதுர அடிகள் மற்றும் சாலை மூலை முடக்கு 37 1/2 சதுர அடிகள் அரக்கோணம் சார்பதிவு அலுவலக தானபத்திர ஆவண எண். 4151/2024 நாள்.24/05/2024 ன் படி தற்போது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 521/2024/எப்1)

**தீர்மானம் எண்.566** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 18</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட/திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுயசான்றின் அடிப்படையில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்தடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டங்கள் கட்ட இணையவழி ( Single Window Portal ) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற (அரசாணை நிலை) எண்.94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள். 18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

<u>சுருக்கம்</u>

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்தல் – ஆணைகள் – வெளியிடப் படுகின்றன.

---

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை

அரசாணை (நிலை) எண். 94

நாள் : 18.07.2024<br>
குரோதி, ஆடி–02,<br>
திருவள்ளுவராண்டு 2055

படிக்கப்பட்டது:–

1. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் T.P.D.C.No. A5/0916/2024, நாள் : 15.07.2024
2. நகராட்சி நிருவாக இயக்குனரின் கடிதம் ந.க. எண். 31917/2019/டிபி2, நாள் : 16.07.2024
3. பேரூராட்சிகளின் இயக்குனரின் கடிதம் ந.க. எண். 5503/2023/இ1, நாள் : 16.07.2024

******

<u>ஆணை</u> :

2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் பத்தி எண்.157–ல் கீழ்கண்டவாறு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது:–

> *"A new module integrated in the single window system will be introduced to facilitate sanction of building permissions based on self-certification, without requirement of completion certificate. Plot sizes up to 2500 sq.ft., and built-up area up to 3500 sq.ft., for the construction of residential structures having ground or ground plus one floor will be eligible for instant registration without the requirements of building permission."*

2. மேற்காணும் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்க ஏதுவாக, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுமானத்திற்கு சுய சான்றின் அடிப்படையில் (Self–Certification) ஒற்றைச் சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி (on–line) வாயிலாக கட்டட அனுமதி வழங்குவதற்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைப்புக் கட்டண விவரங்கள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டது.

3. பார்வை 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், சுய சான்றின் அடிப்படையில் ஒற்றைச் சாளர முகப்பின் மூலம் இணைய வழி கட்டட அனுமதி ஒப்புதலுக்கு, ஒரு சதுர மீட்டர் குடியிருப்பு கட்டுமான பரப்பிற்கு ரூபாய் 1076/– (ஒரு சதுர அடிக்கு ரூபாய் 100/–) என ஒருங்கிணைந்த கட்டணமாக (Consolidated Fee) நிர்ணயம் செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

4. பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிருவாக இயக்குநர், அனைத்து மாநகராட்சிகளையும் 5 நிலையாகவும் மற்றும் நகராட்சிகளை 4 நிலைகளாகவும் வகைப்படுத்தி, ஒவ்வொரு நிலைக்கும், (இணைப்பு IIல் உள்ளவாறு) ஒரே மாதிரியான கட்டணம் (Flat Rate) கீழ்கண்ட பட்டியல்களில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரைத்துள்ளார்:–

| மாநகராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண். | மாநகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ./சதுர அடி |
| 1 | சிறப்புநிலை A மாநகராட்சிகள் | 3 | 950 | 88 |
| 2 | சிறப்புநிலை B மாநகராட்சிகள் | 3 | 900 | 84 |
| 3 | தேர்வுநிலை மாநகராட்சிகள் | 5 | 850 | 79 |
| 4 | நிலை–I மாநகராட்சிகள் | 3 | 800 | 74 |
| 5 | நிலை–II மாநகராட்சிகள் | 6 | 800 | 74 |
| | கூடுதல் | 20 | | |

| நகராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை நகராட்சிகள் | 16 | 800 | 74 |
| 2 | தேர்வுநிலை நகராட்சிகள் | 29 | 800 | 74 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| | கூடுதல் | 138 | | |

5. பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் ஏற்கனவே நான்கு நிலைகளில் வகைப்படுத்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு (இணைப்பு IIIல் உள்ளவாறு) ஒரே கட்டணம் (Flat Rate) என்ற வகையில் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்:–

| பேரூராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | பேரூராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை பேரூராட்சிகள் | 62 | 750 | 70 |
| 2 | தேர்வுநிலை பேரூராட்சிகள் | 179 | 700 | 65 |
| 3 | நிலை – I பேரூராட்சிகள் | 190 | 590 | 55 |
| 4 | நிலை – II பேரூராட்சிகள் | 59 | 485 | 45 |
| | மொத்தம் | 490 | | |

6. மேலும், ஒற்றைச் சாளர இணைய முகப்பின் மூலம் சுயசான்றின் அடிப்படையில் கட்டட உரிமம் வழங்கும்போது கீழ்காணும் நடைமுறைகளைப் பின்பற்ற உரிய ஆணை வழங்குமாறு நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், அரசைக் கோரியுள்ளனர்:–

i. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை நிர்ணயம் செய்யலாம்.

ii. இச்சட்டப்பிரிவு 199 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023–ல் விதி 394–ன்படி நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் கட்டணம் நிர்ணயம் செய்வதிலிருந்து தளர்வு செய்யலாம்.

iii. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 04.02.2019ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019ல் நிர்ணயிக்கப்பட்ட சில கட்டணங்களை (Scrutiny Fee, Display Board Fee) வசூலிப்பதிலிருந்து விலக்களிக்கலாம்.

iv. ஒற்றைச் சாளர இணைய முகப்பின் (Single Window Portal) மூலம் கட்டட உரிமம் வழங்க மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கட்டணங்களை வகைப்படுத்தி உள்ளீடு செய்யலாம்.

v. சுய சான்று (Self–Certification) மூலம் கட்டட உரிமம் ஒற்றைச் சாளர இணைய முகப்பின் (Single Window Portal) வழியாக பெற்றபின் காலிமனை வரி மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம்.

vi. சுய சான்று (Self–Certification) மூலம் கட்டட உரிமம் பெற்றபின், கண்டறியப்படும் விதிமீறல்கள் மீது, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனை விதிக்கலாம்.

vii. இணைப்பில் உள்ளவாறு அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டண விகிதங்களில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டி இருப்பின் தொடர்புடைய துறைத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மாறுதல் செய்திடலாம்.

viii. குடியிருப்பு கட்டுமானம் 325 சதுர மீட்டருக்கு (3500 சதுர அடி) மேல் உள்ள இனங்களுக்கு அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களை தொடர்ந்து வசூலிக்கலாம். மேற்கண்ட கட்டண விகிதங்கள் 325 சதுர மீட்டர் வரை உள்ள புதிய குடியிருப்பு கட்டுமானங்களுக்கு மட்டும் நிர்ணயம் செய்யப் படுகிறது.

7. கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் மேற்காணும் கருத்துருக்களை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின், மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998,

சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xviii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், இணைப்பு I, II மற்றும் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம்) சுய சான்றின் (Self–Certification) அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி கட்டட அனுமதி (Online Building Approval) பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களைக் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| 1. பெருநகர சென்னை மாநகராட்சி<br>325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) குடியிருப்புக் கட்டுமான அனுமதிக்கு ஒருங்கிணைந்த கட்டணம் | |
|---|---|
| ரூ 1076/– ஒரு சதுர மீட்டருக்கு | ரூ 100/–<br>ஒரு சதுர அடிக்கு |

| 2. மாநகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண். | மாநகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை A மாநகராட்சிகள் | 3 | 950 | 88 |
| 2 | சிறப்புநிலை B மாநகராட்சிகள் | 3 | 900 | 84 |
| 3 | தேர்வுநிலை மாநகராட்சிகள் | 5 | 850 | 79 |
| 4 | நிலை–I மாநகராட்சிகள் | 3 | 800 | 74 |
| 5 | நிலை–II மாநகராட்சிகள் | 6 | 800 | 74 |
| | கூடுதல் | 20 | | |

| 3. நகராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ. வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்புநிலை நகராட்சிகள் | 16 | 800 | 74 |
| 2 | தேர்வுநிலை நகராட்சிகள் | 29 | 800 | 74 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| | கூடுதல் | 138 | | |

| 4. பேரூராட்சிகள் – குடியிருப்புக் கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ.வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | பேரூராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ ச.மீ. | ரூ /சதுர அடி |
| 1 | சிறப்புநிலை பேரூராட்சிகள் | 62 | 750 | 70 |
| 2 | தேர்வுநிலை பேரூராட்சிகள் | 179 | 700 | 65 |
| 3 | நிலை – I பேரூராட்சிகள் | 190 | 590 | 55 |
| 4 | நிலை – II பேரூராட்சிகள் | 59 | 485 | 45 |
| | மொத்தம் | 490 | | |

8. மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் சுய சான்று மூலம் கட்டட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்.

9. மேற்காணும் வழிகாட்டுதல்களை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பதிவிற்கு வைத்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

10. நிறைவுச் சான்றிதழ் தேவையின்றி, சுயசான்றிதழ் அடிப்படையில் கட்டட அனுமதிகளை வழங்க ஏதுவாக ஒற்றைச்சாளர முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய தொகுதியில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரை தளம் (அ) தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுமானத்திற்கு சுயச்சான்றின் அடிப்படையில் (Self–Certification) ஒற்றைச் சாளர முறையில் இணைய வழியில் கட்டட அனுமதி பெறுவதற்கு மேற்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை உள்ளீடு செய்வதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

// (ஆளுநரின் ஆணைப்படி) //

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–600003.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–600028.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை–600028.
நகர் ஊரமைப்பு இயக்குநர், கோயம்பேடு, சென்னை–600107.
உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்,
கோயம்பேடு, சென்னை–600107.

| DETAILS OF MUNICIPALITIES | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| III. Grade-I Municipalities | | Consolidated Fee | | | | |
| Sl. No | Name of the Municipality | Rs. Per Sq.m | | | | Rs. Per Sq.ft |
| | | Building License Fee | D.C | LWF | Total | |
| **Chengalpattu Region** | | | | | | |
| 1 | Chengalpattu | | | | | |
| 2 | Panruti | | | | | |
| 3 | Virudhachalam | | | | | |
| 4 | Thiruthani | | | | | |
| 5 | Nandhivaram-Guduvanchery | | | | | |
| **Vellore Region** | | | | | | |
| 6 | Arakkonam | | | | | |
| 7 | Arani | | | | | |
| 8 | Arcot | | | | | |
| 9 | Gudiyatham | | | | | |
| **Salem Region** | | **519** | **10** | **221** | **750** | **70** |
| 10 | Edappadi | | | | | |
| 11 | Komarapalayam | | | | | |
| 12 | Rasipuram | | | | | |
| **Tiruppur Region** | | | | | | |
| 13 | Palladam | | | | | |
| 14 | Sathyamangalam | | | | | |
| 15 | Kangeyam | | | | | |
| 16 | Thirumuruganpoondi | | | | | |
| **Thanjavur Region** | | | | | | |
| 17 | Aranthangi | | | | | |
| 18 | Manapparai | | | | | |
| 19 | Vedaranyam | | | | | |
| 20 | Jeyankondam | | | | | |

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31917/2019/டிபி2 நாள் 25/07/2024 – ல் கட்டட வரைபட அனுமதி சுயசான்று (**Self Certification**) முறையில் குடியிருப்புகளுக்கு கட்டட வரைபட அனுமதி நகர்புற உள்ளாட்சி மன்றங்களால் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டணங்களை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு இணையாக உள்ளவாறு வசூலிக்கப்பட வேண்டும் என்றும், சுய சான்றளிப்பு அடிப்படையில் அனுமதி பெறப்பட்ட கட்டட மனைகளுக்கு கட்டட அனுமதி வழங்கப்பட்ட 30 தினங்களுக்குள் காலிமனை வரி வசூலிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 307/2019/எப்1)

**தீர்மானம் எண்.567** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண்.19</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் கீழ்காணும் 5 எண்ணிக்கையிலான பணிக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடித செயல்முறை ந.க.எண்.அ4/2712/2024 நாள்.16.08.2024ல் ரூ.23.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் பணிகளுக்கு 18.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2ல் மாதவ நகர் விரிவாக்க பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | ரூ.8.00 | **N.பாபு** | 7,98,066 | **R.டில்லிபாபு** | 8,22,347 |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 கணேஷ் நகர் காரிய மேடைக்கு தரை மற்றும் ஷெட் அமைத்தல் பணி. | ரூ.2.00 | **R.டில்லிபாபு** | 1,99,869 | **C.பத்மநாபன்** | 2,10,516 |
| 3 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 T.N.நகரில் ICDS கட்டடத்திற்கான சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல் பணி. | ரூ.5.00 | **S.கஸ்தூரி** | 4,96,925 | **R.டில்லிபாபு** | 5,00,448 |
| 4 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31ல் உள்ள புதுப்பேட்டை 3 வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல் பணி (130m) | ரூ.5.00 | **C.பத்மநாபன்** | 4,99,960 | **M.கிரிதரன்** | 5,01,455 |
| 5 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28ல் உள்ள சோமசுந்தரம் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல் பணி (65m) | ரூ.3.50 | **திருமலையன் ஒப்பந்ததாரர்** | 3,49,718 | **C.பத்மநாபன்** | 3,55,298 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.532/2024/இ1)**

**தீர்மானம் எண்.568** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.20**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையத்தில் 50 எண்ணிக்கை வணிக கடைகள் கட்டடம் கட்டுவதற்கு ரூ.75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வணிக கடைகளுக்கான கட்டடம் கட்டும் பட்சத்தில் இந்நகராட்சிக்கு மாதந்தோறும் வருவாய் ஈட்டி தரும் வகையில் அமையும். எனவே மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி வருவாய்நிதி அல்லது பின்னர் பெறப்படும் ஏதேனும் அரசு மானியத்தில் ஈடு செய்து கொள்ளவும், இப்பணிக்கான நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களிடம் பிரேரணை அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 981/2024/இ1)

**தீர்மானம் எண்.569** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**பொருள் எண்.21**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ள கலன்கள், தேவையற்ற டயர்கள், உடைந்த பொருட்கள் அப்புறப்படுத்துதல் மேலும் தண்ணீர் தேக்கி வைக்க கூடிய கலன்கள், கீழ்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொசு புழுக்கள் உருவாகாமல் தடுக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும், மேலும் காய்ச்சல் கண்ட நபர்களின் விவரங்களை சேகரித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் 18 களப்பணியாளர்கள் (DBC) ) பணியினை மேற்கொண்டு வருகின்றனர். 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் (DBC) வீதம் மொத்தம் 19345 வீடுகளுக்கு 64 களப்பணியாளர்கள் (DBC) தேவைப்படுவதால் மீதமுள்ள 46 களப்பணியாளர்கள் பணியமர்த்த வேண்டியுள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரர் மூலமாக பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 28.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் அனுமதிக்கும், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | M/S Sri Vari Enterprises Arakkonam | M/S Sri Sai Ram Enterprises Tiruvallur | M/S A1 Security Services and A1 Facility Services Chennai –56 |
|---|---|---|---|---|---|
| | | | (நபர் ஒருவருக்கு EPF + ESI) | (நபர் ஒருவருக்கு EPF + ESI) | (நபர் ஒருவருக்கு EPF + ESI) |
| 1. | டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பணிகளுக்கு 46 களப்பணியாளர்கள் (DBC) விநியோகம் செய்தல். | 15.00 | 362 | 410 | 35000 |

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.566/2024/எச்1)

**தீர்மானம் எண்.570** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண்.22</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 சரோஜினி தெருவில் அமைந்துள்ள நகராட்சி பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் முகப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 868 /2024/இ1)

**தீர்மானம் எண்.571** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண்.23</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 கணேஷ் நகர் பகுதியில் சர்வே வார்டு – B, பிளாக்–38, நகரளவு எண்.37ல் மேற்படி மனைப்பிரிவில் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி 4608 சதுர அடி பூங்கா இடம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்காவினை நகராட்சி கட்டுபாட்டில் சுற்று வேலி அமைத்து பாதுகாப்பாக வைக்க மதிப்பீடு ரூ.0.80 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.869/2024/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.572** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண்.24</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 புதிய பேருந்து நிலையம் கட்டடத்தின் மேற்கூறையின் பூச்சுவேலை பழுது ஏற்பட்டு கொட்டி வருகிறது. இதனால் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே பழுது ஏற்பட்டுள்ள பூச்சுவேலையினை சரி செய்வதற்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.870/2024/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.573** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>சாதாரண நகர மன்ற கூட்டம் எண்.33</u>** **<u>நாள் 26.09.2024.</u>**

**<u>கூட்டத்தின் போது கொண்டு வரப்பெற்ற மன்றப்பொருள்</u>**

**<u>பொருள் எண்.25</u>**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்கள் மற்றும் உயர் அலுவலர்களின் காணொளி ஆய்வு கூட்டங்களில் தெரிவித்துள்ளதற்கிணங்க, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் இடர்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கைகான பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதிய வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் இருப்பு இல்லாத காரணத்தினால் பொதுப்பணித்துறையால் நிர்ணயம் (SOR) செய்யப்பட்டுள்ள விலை விகிதத்தில் இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களின் மூலம் மேற்படி பணிக்களை செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.2.00 இலட்சம் 2024-25 ஆண்டு வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண். 1817/2019/இ1)

**தீர்மானம் எண்.574** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

**<u>பொருள் எண்.26</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்,17 புதிய பேருந்து நிலையத்தில் நூலகம் அமைக்க இடம் ஒதுக்கிடு செய்து தருமாறு மாவட்ட நூலக அலுவலர், வேலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் ஓய்வு அறையில் பயணிகள் பயன்பெறும் வகையில், நூலகத்திற்கான இட ஒதுக்கீடு செய்து தர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.575** **நாள். 26.09.2024**

**அலுவலக குறிப்பு : மன்றத்தில் அனுமதிகப்பட்டது.**

(ஒம்)/-திருமதி.லட்சுமி பாரி,
**நகரமன்ற தலைவர்**
**அரக்கோணம் நகராட்சி**

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.

30/9/24